# சங்கரன்கோவில் நகராட்சி

**2021-ம் ஆண்டு ஜூலை மாதம் 30.07.2021ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக்கூட்டம்**

பொருள் எண் : 1197

சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளரின் ஜூலை 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1198

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு - 30ல் குருநகர் கடைசி பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக கிடைக்காத காரணத்தினால் 4" Sulice Valve மற்றும் பைப்லைன் அமைத்து குடிநீர் விநியோகம் சீராக வழங்குவதற்கு பணியினை மேற்கொள்ள ரூ.42,000/- தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு

1. மன்ற அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 1686/2021/இ2 )

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1199

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட 30வார்டுகளிலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் பெறப்பட்டு மூன்று மேல்நிலை தொட்டிகள் பேருந்துநிலையம், திருவள்ளுவர் பூங்கா, கழுகுமலைரோடு, ஆகிய மேல்நிலை தொட்டிகளில் குடிநீர் ஏற்றம் செய்யப்பட்டு நல்ல முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நகரில் உள்ள ஆழ்துளை கிணறுகள், அடிபம்புகள், மற்றும் மின்மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. மேலும் பகிர்மான குழாய்கள் அமைத்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு சீரான குடிநீர் விநியோகம் செய்ய முடிவதில்லை. எனவே பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள், அடிபம்புகள், சிறுமின்விசைபம்புகள் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய பழுதுபொருட்கள் வாங்கிட உடனடி நீக்கம் செய்து நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ-7.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்:1687/2021/இ2)
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1200

சங்கரன்கோவில் நகராட்சி திருநெல்வேலி செல்லும் ஒருவழிச் சாலையில் வடகாசியம்மன்கோவில் 2ம்தெருவில் ஒட்டியுள்ள நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடத்தினை சுற்றி இரும்பு வலையிலான பென்சிங் அமைப்பதற்கும் மற்றும் அந்நியர்கள் யாரும் இந்த இடத்தை அபகரித்துவிட கூடாது என்பதால் நகராட்சி இடத்தனை பாதுகாப்பது மிகவும் அவசியமாகிறது. மேற்கண்ட பணியினை ரூ.30,000/-லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1201

இந்நகராட்சி ராஜபாளையம் சாலையில் உள்ள திருவள்ளுவர் பூங்கா மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தின் சுற்றுச்சுவர் சமீபத்தில் பெய்த மழையினால் மரங்கள் விழுந்து முன்புறச் சுவர் இடிந்து விழுந்துள்ளது. இதனால் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி

வளாகத்திற்கு அந்நியர்கள் உட்புகாதவாறு தடுக்க வேண்டிய நிலைஉள்ளது. எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள ரூ.30000/-தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்படைப்பு பணியாக ஒப்பந்தக்காரர் திருஆர்.மகாலிங்கம் என்பவர் மூலம் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1202

சங்கரன்கோவில் நகரில் தினசரி சேகரமாகும் உரமாக்க இயலாத குப்பைகள் மற்றும் மரக்கிளைகள் இந்நகராட்சியின் உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. தற்போது Biomining பணிகள் நடைபெறுவதால் அருகில் தனியாக earmarked செய்யப்பட்ட இடத்தில் மேற்கண்ட குப்பைகள் கொட்டப்பட்டு வந்தது. நகராட்சிக்குச் சொந்தமான JCB வாகனம் பழுது நீக்கம் பணிக்காக பணிமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் அப்பகுதி முற்றிலும் நிரம்பிவிட்டதால் மேற்கொண்டு தினசரி கழிவுகளை கொட்டுவதற்கும் அதனை அப்புறப்படுத்தவும் சிரமமாக உள்ளது. எனவே சுகாதாரப்பணிக்கு தேவைப்படும் நாட்களில் மேற்கண்ட குப்பைகளை சமப்படுத்தி இடங்களை சுத்தம் செய்ய 2021–2022 ஒரு வருடத்திற்கு பணிகள் மேற்கொள்ள தனியார் JCB மற்றும் Hitachi இயந்திரம் கொண்டு வாடகைக்கு அமர்த்தி தனியார்மூலம் பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – பொதுசுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1203

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், சங்கரன்கோவில் நகராட்சி நம்பர் 8 மெயின் ரோடு கதவு எண் 293ல் வசித்து வருகின்ற கார்த்திக் த/பெ (லேட்) மோகன் என்பவர் நகரளவு எண்.2/1,2/2 வார்டு-பி பிளாக்-5ம் இடம் சம்மந்தமாக நகராட்சி ஆணையாளர் அவர்களை 5ம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD).No. 9164/2021 மற்றும் W.M.P.(MD).No. 6906/2021ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு திரு.பி.மகேந்திரன்,பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்யவும் இவ்வழக்கினை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு தொகை ரூ.7500/-.வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக. ந.க.எண்: 1705/2021/எப்1.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1204

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், சங்கரன்கோவில் நகராட்சி இரயில்வேபீடர் ரோடு கதவு எண் 22ல் வசித்து வருகின்ற திரு.வி.எஸ்.வீரபுத்ரன் த/பெ சங்கரபாண்டியன் என்பவர் தனது வீட்டின் முன்பு உள்ள நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடத்தை அந்நியநபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளது சம்மந்தமாக நகராட்சி ஆணையாளர் அவர்களை 1ம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD).No. 12672/2021-ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு திரு.பி.மகேந்திரன்.,பி.ஏ.பி.எல். நகராட்சி வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்யவும் இவ்வழக்கினை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு தொகை ரூ.7500/- திரு.பி.மகேந்திரன் பி.ஏ.பி.எல். வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக. ந.க.எண்: 1706/2021/எப்1

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1205

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.20794/2019/ஜே3 நாள்.07.07.2021ன்படி விருதுநகர் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வந்த திரு.ஆர்.விஜயகுமார், என்பவரை சங்கரன்கோவில் நகராட்சிக்கு பணிமாறுதல் செய்யப்பட்டுள்ளதை எதிர்த்தும், தமக்கு தூய்மை பணிமேற்பார்வையாளர் பணியிடம் வழங்கிடக்கோரியும், சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும்

திரு.கு.சமுத்திரவேல் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற கிளை மதுரை நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.11901/2021 ன்படி 1.நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை, 2.நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி, 3.நகராட்சி ஆணையாளர், சங்கரன்கோவில், 4.திரு.ஆர்.விஜயகுமார், தூய்மை பணி மேற்பார்வையாளர், ஆகியோரை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு இந்நகராட்சியின் சார்பாக ஆஜராகி வாதிடவும், வழக்கறிஞர் கட்டணமாக ரூ.7500/– வழக்கறிஞருக்கு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.1523/2021/சி1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1206

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட மூன்று குடிநீர் திட்டங்கள், கோட்டமலையாறு, தாமிரபரணி, மானூர்-I, மானூர்- II, ஆகியவற்றிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பெறப்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மூன்று மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், பூங்கா மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, கழுகுமலை சாலை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பேருந்து நிலைய நீர்த்தேக்க தொட்டி ஆகிய நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஆழ்துளை கிணறுகள் மற்றும் சிறுமின்விசை பம்புகள் ஆகியவற்றிலிருந்து பொது விநியோகத்திற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு செல்லும் பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளால் குடிநீர் விநியோகம் தடைபடுகிறது. இதனால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுவதை நிவர்த்தி செய்யும் பொருட்டு PVC குழாய்கள் GI குழாய்கள் மற்றும் அதற்கு தேவையான உதிரி சாமான்கள் வாங்குவதற்கு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி 30.09.2020ல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 11.10.2020 கோரப்பட்டு முறையாக குடிநீர் விநியோக உதிரி சாமான்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சுமார் ஆறு மாதத்திற்கு நவம்பர் 2020 முதல் ஏப்ரல் 2021 வரை மேற்கண்ட தொகை அனுமதிக்கப்பட்டு வருகிறது. மேலும் நிர்வாக காரணங்களுக்காக அடுத்தடுத்த மாதங்களுக்காக தேவையான பொருட்கள் சப்ளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத காரணத்தினால் கூடுதலாக இரண்டு மாதங்களுக்கு சேர்த்து பொருட்கள் சப்ளை செய்த வகைக்கு தொகை ரூ.8.70 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்:1348/2020/இ2

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் – 1207

**சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு - 30ல் ரயில்வே பீடர் ரோடு, புதிய குடிநீர் குழாய் இணைப்பு வேண்டியுள்ளனர். மேற்கண்ட இடம் நேரில் பார்வை செய்யப்பட்டதில் மேற்கண்ட பகுதியில் நகராட்சி குடிநீர் பகிர்மான குழாய் இல்லாததால் மேற்கண்ட பகுதிகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க பகிர்மான குழாய் அமைக்க மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ரூ.1,55,000/- தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்காக. ந.க.எண்: 0115/2021/இ2**

அலுவலகக்குறிப்பு

1. மன்ற அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

தனி அதிகாரி மற்றும்
ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி.

நாள் – **30.07.2021.**